காலை முரசு

பக்கங்கள் 23

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 25 சனிக்கிழமை 10.08.2024 | அதிர்வு 08

## கடைசி நேரத்தில் பின்வாங்குவாரா நாமல் ராஜபக்ஷ?



ஜனாதிபதித் தேர்தல் சமரிலிருந்து நாமல் ராஜபக்ஷ கடைசி நேரத்தில் பின்வாங்கக்கூடும் என்று 05



# தற்கொலைக் குண்டுகளை உடலில் தாங்கிக்கொண்டே ரணிலுடன் இணைந்தோம்

## பதவி இழந்த ஹறின் பெருமிதம்

தற்கொலைக் குண்டுகளை உடலில் தாங்கிக்கொண்டே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக தானும் மனுஷவும் களத்தில் இறங்கினோம் என்று உயர்நீதி மன்றத் தீர்ப்பின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த முன்னாள் அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்தார். C5

## ஆனையிறவு சோதனைச்சாவடியுடன் மோ.சைக்கிள் மோதி இளைஞர் பலி!



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவு இராணுவச் சோதனைச் சாவடிக்கு முன்னால் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று C5




மாகாண சபைகளுக்கான தேர்தல்களை மீண்டும் நடத்துவதற்கு வழி செய்யும் மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை திரும்பவும் நடைமுறைக்கு கொண்டு வரச் செய்வதற்கான சட்ட மூலத்தை நிறைவேற்றும் விவகாரம் எதிர்பார்த்தபடி முன் நகரருகின்றது.

சுமந்திரன் எம்.பி. தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பித்துள்ள இந்தச் சட்டமூலத்தை உயர்நீதி மன்றம் வழங்கிய பரிந்துரைப்படி மாற்றுவதற்கான விவகாரம் சட்ட விடயங்களுக்கான நாடாளுமன்ற நிலையியல் குழுவின் முன்னால் நேற்று பிற்பகல் பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. C5



# ஓ.எம்.பி. அலுவலகப் பெயர்ப் பதாகைக்கு தக்காளித் தாக்குதல் நடத்திக் கவனவீர்ப்பு

## வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முனெடுப்பு

(கே.வசந்தன்)

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கொட்டகைக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் பெயர் பலகை பொறிக்கப்பட்ட பதாகை ஒன்றைக் காட்சிப்படுத்தியமையோடு அதற்குத் தக்காளிப் பழத்தினால் எறிந்து தமது எதிர்ப்பைக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்திற்கு தெரிவித்திருந்தனர்.

இதன்போது அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கொடிகளை ஏந்தி இருந்தமையோடு, “2 லட்சம் லஞ்சம் நாங்கள் கேட்கவில்லை, இலங்கையில் இடம் பெற்ற இனப்படு கொலைக்கு நீதியை கேட்கிறோம்“ என்ற வாசகங்களும் எழுதி இருந்தனர்.










# வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டை கட்டியெழுப்ப உதவுமாறு ஜனாதிபதி கோரிக்கை

"மக்களின் சுமையைக் குறைத்து அடுத்த தலைமுறைக்கு வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப உதவுமாறு இலங்கையிலுள்ள அனைத்துப் பெண்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன். அன்று உணவு வழங்க முடியாமல், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் இந்நாட்டு தாய்மார்கள் அனுபவித்த துன்பங்களை யாரும் மறந்துவிடக் கூடாது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"பெண்கள் எமது பலம்" எனும் தொனிப்பொருளில் நேற்று கொழும்பு இலங்கை கண்காட்சி மற்றும் மண்டபத்தில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கட்சி வேறுபாடின்றி நாடளாவிய ரீதியில் உள்ள பிரதான பெண்கள் அமைப்புக்கள் மற்றும் கட்சி கிளைச் சங்கங்களின் தலைவிகள் மற்றும் பிரதிநிதிகள் பெருமளவானோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நான் ஏன் கட்சி சார்பற்ற வேட்பாளராக போட்டியிடுகிறேன் என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். பசி கட்சி சார்பற்றது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பசி உணரப்படுகின்றது. வயிற்றைப் பட்டினி இன்றி நிரப்புதல் நடுநிலையானது.

எனவே, அரசியல் கட்சி நிற பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டு மக்களின் வயிற்றை நிரப்ப ஒன்றிணைய வேண்டும். இந்நாட்டு மக்கள் படும் துன்பங்களை நான் நன்கு புரிந்து கொண்டுள்ளேன். மின்சாரம் இல்லாமல், எரிபொருள் இல்லாமல், உணவு இல்லாமல், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் நீங்கள் அனைவரும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டீர்கள்.

நாம் மீண்டும் இந்த துன்பத்தை சந்திக்க வேண்டுமா? அந்த நிலைமை ஏற்படாமல் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

ஏனையவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்காமல் ஓடியதால்தான் நான் ஜனாதிபதியானேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுர திஸாநாயக்க ஆகியோரிடம் "இந்த சிரமங்களிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுவோம்" என்று கோரிக்கை விடுத்தேன். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற அவர்கள் எங்களை ஆதரிக்கவில்லை.

அதன்போது, எனக்கு மூன்று பெண்கள் ஆதரவு வழங்கினர். இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராம், அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா ஆகிய 3 பெண்கள்.

தேசப்பற்று குறித்து பேசுபவர்கள், மக்கள் படும் துன்பங்கள் தமக்குத் தெரியும் என்று கூறியவர்கள் அன்று ஓடினார்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த மூன்று பெண்கள் நாட்டை முன்னேற்ற உதவினார்கள். இந்த மூவரின் உதவி இல்லாவிட்டால் இன்று நாம் இந்த நிலையை அடைந்திருக்க முடியாது.

இந்நாட்டில் உரம் இல்லாத போது அமெரிக்காவைச் சேர்ந்த சமந்தா பவர் எங்களுக்கு ஆதரவளித்தார். அந்த உரத்தை வழங்கியதன் காரணமாக அந்த சிறு போகத்தில் வெற்றி பெற்று பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு வர முடிந்தது. எனவே அந்தப் பெண்களுக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

சிறந்த தேசபக்தர்கள், அனுபவம் வாய்ந்த தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் எவரும் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்கவில்லை. மிகவும் சிரமப்பட்டு ஒரு நாடாக முன்னோக்கி வந்தோம். நாம் மேலும் செல்ல வேண்டும். நாம் அனைவரும் பட்ட துன்பங்களைச் கூறத் தேவையில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். 2021ஆம் ஆண்டில், வணிக வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருள்களின் மதிப்பு 250 பில்லியன் ரூபா. இன்று அது 500 பில்லியன் ரூபாயைத் தாண்டியுள்ளது. எனவே, அது தொடர்பில் நாம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

சில வீடுகளில் பெரியவர்கள் ஒரு வேளை உணவைத் தவிர்த்து விடுவார்கள். மற்றொரு பிரிவினர் தங்கள்

தொடர்ச்சி▼



# வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டை கட்டியெழுப்ப உதவுமாறு ஜனாதிபதி கோரிக்கை





தொடர்ச்சி▲

பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்க முடியாமல் தவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா நான் ஆதரவைக் கோரியபோது வழங்கிய உதவியினால் இன்று இந்த நிவாரணங்களை நாங்கள் பெற்றுள்ளோம். ஜெனட் யெலன் மற்றும் நிர்மலா சீதாராமன் ஆகியோர் எங்களுக்கு ஆதரவளித்தனர். இன்று நாங்கள் வலுவாக முன்னேர முடிந்தது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் எங்களுக்கு கடன் வழங்கும் பல நாடுகளுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளோம். நாங்கள் அதன்போது இணங்கிய நிபந்தனைகளை பொருளாதார பரிமாற்றச் சட்டத்தில் சேர்த்துள்ளேன். இந்தப் பாதையில் நாம் தொடர்ந்தால், ஒரு நாடாக நாம் மீண்டு வரக்கூடிய திறன் உள்ளது.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் திருத்தப்படும் என சிலர் கூறுகின்றனர். நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என பகிரங்கமாக அறிவித்துவிட்டு தப்பி ஓடியவர்கள் இன்று பெண்களின் ஆதரவுகளால் கிடைத்த இந்த நிவாரணத்தை அகற்றுவோம் என கூறுகிறார்கள்.

நாங்கள் அனைவரும் மிகவும் சிரமப்பட்டு இந்தப் பயணத்தை வந்துள்ளோம். எனவே, இந்த நிவாரணத்தை இழப்பதா அல்லது பாதுகாப்பதா என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன்போது, முகத்தையோ பெயரையோ பார்க்காமல் தான் மற்றும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்க வேண்டும், நீங்கள் அந்த முடிவை எடுக்க வேண்டும்.

இந்த கடினமான பயணத்திலும் இந்த நாட்டு பெண்களை நான் மறக்கவில்லை. அஸ்வெசும, உறுமய, குறைந்த வருமானம் கொண்டவர்கள் வசிக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கு உரிமை வழங்குதல், மலையகத்தில் கிராமங்கள் அமைக்கும் திட்டம், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் போன்ற வேலைத் திட்டங்களை செயல்படுத்தி நிவாணரங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று, பெண்களை வலுவூட்டவும் நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அதற்காக பெண்களை வலுவூட்டும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். 20-30 வருடங்களாக இந்த நாட்டில் சிறுபான்மையினரின் உரிமைக்கான போராட்டங்கள் நடந்துகொண்டிருந்தன. இப்போது அவற்றைப் பேசித் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.” - என்றார்.











# 16 வயது மாணவியை சீரழித்த 22 மாணவர்கள்

## இலங்கையில் அதிர்ச்சி சம்பவம்

தனமலவில பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவரை, ஒரு வருடமாக அதே பாடசாலையில் பயிலும் 22 மாணவர்கள் தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இந்தநிலையில், பாதிக்கப்பட்ட 16 வயது மாணவி தனமலவில பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

அதன்படி, சம்பவத்தில் ஈடுபட்ட 22 மாணவர்கள் மற்றும் அதற்குத் துணையாக இருந்த அனைவரையும் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான உண்மைகளை மறைத்தமைக்காக அந்தப் பாடசாலையின் அதிபர் உட்பட அனைவருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

இந்தச் சட்டமூலத்தில் இரண்டு மாற்றங்களை உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது. அதற்கேற்ப சட்ட மூலத்தை மாற்றி அமைக்கும் அந்தச் சிறிய வேலையை சம்பந்தப்பட்ட நிலையியல் குழு நேற்று கூடி செய்து விட்டது.

இனி அந்த வடிவம் எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அதன் பின்னர் வரும் மூன்றாம் திகதி இந்தச் சட்ட மூலம் மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பெரும்பாலும் அன்றே விவாதம் இன்றி – வாக்கெடுப்பின்றி – இந்தச் சட்ட மூலம் மூன்றாம் வாசிப்பிலும் நிறைவேற்றப்பட்டு சட்டமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தச் சட்ட மூலம் நடைமுறைக்கு வந்தால், அடுத்துத் தாமதம் இன்றி மாகாண சபை தேர்தல் நடக்கும். அதற்கான அதிகாரம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கு வந்து விடுவதால் தேர்தலை ஆணைக் குழு விரைந்து நடத்த நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கலாம். நம்பலாம்.

* * *

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பயணிகளுக்கும் 'ஈ – விசா' வழங்கும் வேலையைச் செய்யும் பொறுப்பை ஒரு நபருக்கு 25 டொலர் என்ற கட்டணத்தில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு தாரை வார்த்த இலங்கை அரசியல்வாதிகளின் நடவடிக்கையை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை மூலம் தடுத்து விட்டது என்பது தெரிந்ததே.

பழைய முறைப்படி ஒரு பயணிக்கு ஒரு டொலர் என்ற கட்டணத்தில் ஈ–விஸா வழங்கும் அந்தப் பொறுப்பை மொபிட்டல் நிறுவனத்திடம் மீள ஒப்படைக்கும்படியும் உயர்நீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் வழிகாட்டி இருந்தது.

ஆனால் பத்து நாள்கள் கடந்தும் அந்த முறைமை இன்னும் மொபிட்டல் நிறுவனத்திடம் மீளக் கையளிக்கப்படவில்லை.

உயர்நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்தமையால் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்ற எனத் தெரிகின்றது.

அரசியல்வாதிகளின் முறையற்ற உத்தரவுகளுக்கு இணங்கும் அதிகாரிகள் நீதிமன்றங்களில் குட்டு படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

### கடைசி நேரத்தில்...

மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பிரதான கட்சிகளுடன் பேரம் பேசுவதற்காகவே நாமல் ராஜபக்ஷ வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ போட்டியிடமாட்டார். அவர் போட்டியிடுவது மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நல்லது அல்ல. சஜித் மற்றும் ரணிலுடன் பேரம் பேசி ஆதரவை வழங்குவதற்காகவே நாமல் வேட்பாளராகப் பெயரிடப்பட்டுள்ளார் என நினைக்கின்றேன்.

சிலவேளை நாமல் போட்டியிட்டால்கூட அவருக்கு நான்காவது இடம்தான் கிட்டும்.

முதல் இடம் ஜனாதிபதி ரணிலுக்கு, இரண்டாவது இடம் சஜித்துக்கு, மூன்றாவது இடம் அநுரவுக்கு கிடைக்கப்பெறும்."

– என்றார்.

### தற்கொலைக் குண்டுகளை...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் என அறிந்துகொண்டே இந்தப் பணியில் இறங்கினோம். எமது பதவிகளுக்கு அப்பால் நாட்டின் நலனும் நாட்டின் முன் இருந்த சவால்களுமே எமக்கு முதன்மையாக இருந்தன.

ஜனாதிபதியைப் போன்று தானும் மனுஷ நாணயக்காரவும் இன்று முதல் சுதந்திரமாகச் செயற்படுவோம் என்பதுடன், புதிய அரசியல் பயணமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

தற்கொலைக் குண்டுகளை உடலில் தாங்கிக்கொண்டே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகக் களமிறங்கினோம். ஆனால், இன்று நாட்டையும் காப்பாற்றியுள்ளோம். எம்மையும் காப்பாற்றியுள்ளோம்.

ஜனாதிபதியின் வெற்றிகாகப் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்."

– என்றார்.

### ஆனையிறவு...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசுவமடு, ரெட்பாரா பகுதியில் இருந்து இருவர் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து இராணுவத்தின் சோதனைச் சாவடியுடன் மோதி, எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடனும் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விசுவமடு, ரெட்பாரா பகுதியைச் சேர்ந்த காந்தரூபன் கலையரசன் என்னும் 21 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மூன்று பேர் படுகாயம் அடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தூக்கம் அவசியம்

சுகாதாரப் பழக்க வழக்கங்களில் முக்கியமானது ஒழுங்கமைவான தூக்கம். இலங்கையர்களின் தூக்கப் பழக்க வழக்கம் தொடர்பில் அதிருப்தியான தகவல்கள் மருத்துவத் துறைகளில் இருந்து வருகின்றன.

இலங்கையில் ஒரு வயதிற்கும் குறைவான குழந்தைகளில் சுமார் 25 வீதமானவை தூக்கம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. நல்ல தூக்கம் இல்லாத இந்தப் போக்கு பல்வேறு உடல் மற்றும் மனநல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் டாக்டர் ஏனோகா விக்கிரமசிங்க கூறுகின்றார்.

இலங்கை சிறுவர்கள் மத்தியில் தூக்கம் குறித்து அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றாலும், கிடைக்கக்கூடிய வரம்பற்ற தரவுகளைக் கருத்தில் கொண்டு, இளம் பருவத்தினர் மற்றும் பெரியவர்களில் தூக்கமின்மையின் விளைவுகள் மோசமாக இருப்பதாக அவர் கூறும் விடயம் கவனிக்கப்பட வேண்டும்.

''முன்பெல்லாம் மக்கள் சூரியன் மறைந்ததும் தூங்கி விடுவார்கள். சூரியன் உதிக்கும் போது எழுந்திருப்பார்கள். செயற்கை விளக்குகளின் நீடித்த பயன்பாடு மற்றும் மொபைல் போன்கள், கணினிகள், டப்கள் மற்றும் டிவி போன்ற சாதனங்கள் திரையை நோக்கும் மக்களின் நேரத்தை அதிகரித்து அவர்களைத் தூங்க விடாது விழித்து வைத்திருக்கச் செய்கின்றன. அப்படி விழித்திருக்க வைப்பது அவர்களின் தூக்க முறைகளை எதிர்மறையாகப் பாதிக்கிறது.'' - என்று அவர் விளக்குகின்றார்.

உண்மைதான். எமது நேரத்தின் பெரும் பகுதியை போன்கள், கணினிகள், டப்கள், டி.விக்கள் போன்றவை அவற்றின் திரைகளைப் பார்த்துக் கொண்டிருக்க வைத்து விழுங்கி விடுகின்றன.

தூக்க முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் பல்வேறு உடல், மன மற்றும் சமூக பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன எனப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக, மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த பல விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று டாக்டர் விக்கிரமசிங்க மேலும் கூறுகின்றார்.

குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கு நிலையான நினைவாற்றல் ஏற்படுவதற்கு நல்ல தூக்கம் அவசியம். எனவே, பிள்ளைகள் நல்ல ஆழ்ந்த - குழப்பமற்ற - உறக்கத்தைப் பெறுவதை உறுதிப்படுத்துவது பெற்றோரின் பொறுப்பாகும் என டாக்டர் விக்கிரமசிங்க குறிப்பிடுகின்றமை மிக முக்கியமானதாகும்.

நல்ல உறக்கப் பழக்கத்தைப் பயிற்சி செய்ய, தூங்கச் செல்லும் மற்றும் எழுந்திருக்கும் வழக்கமான நேரம், அவர்கள் தூங்கும் இடம், அவர்கள் தூங்கும் விதம், சுற்றுச்சூழல் நிலைமைகள் மற்றும் தூக்கத்தின் காலம் போன்ற பல படிகளைப் பின்பற்ற வேண்டும். பெற்றோர்களும் பாதுகாவலர்களும் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல தூக்கப் பழக்கத்தை வளர்க்க உதவலாம். உதவ வேண்டும்.

உலக சுகாதார அமைப்பு ஒவ்வொரு வயதினருக்கும் ஒரு நாளைக்கு எத்தனை மணிநேர தூக்கம் என்பது குறித்து பரிந்துரைகளை வழங்கியுள்ளது. பிறந்ததிலிருந்து மூன்று மாதங்கள் வரையிலான குழந்தைகள் ஒரு நாளைக்கு 14 முதல் 17 மணி நேரம் தூங்க வேண்டும் என்று அது பரிந்துரைக்கிறது.

நான்கு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை, குழந்தைகளுக்கு 12 முதல் 16 மணி நேரம் தூக்கம் தேவை. 1 முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகள் 11 முதல் 14 மணி நேரம் தூங்க வேண்டும்,.3 முதல் 4 வயது வரை உள்ளவர்கள் 10 முதல் 13 மணி நேரம் வரை தூங்க வேண்டும். 5 வயதில், குழந்தைகள் 10 முதல் 12 மணி நேரம் தூங்க வேண்டும்.

உலக சுகாதார நிறுவனப் பரிந்துரைகளின்படி, ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் 24 மணி நேர தூக்கத்தில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக பெற வேண்டும், ஏனெனில் இது அவர்களின் உடல், மன மற்றும் சமூக நலனுக்கு உதவுகிறது.

இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் தங்கள் மன மற்றும் உடல் ஆரோக்கியத்திற்காக குறைந்தது 7-8 மணிநேர தூக்கத்தை இலக்காகக் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் உறங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக டிஜிட்டல் திரைகளைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்று டாக்டர் விக்கிரமசிங்க பரிந்துரைத்தார். பெற்றோர்கள் இதனை விசேடமாகக் கவனிக்க வேண்டும்.

தற்போதுள்ள தரவுகளின்படி, இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் டிஜிட்டல் திரைகளைப் பயன்படுத்துவது ஏற்றதல்ல. 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் டிஜிட்டல் திரையை ஒரு நாளைக்கு அரை மணி நேரம் வரை பயன்படுத்தலாம். அதுவும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் மேற்பார்வையின் கீழ்.

# நல்லூர் கந்தன் முதலாம் நாள் மாலை உற்சவம்

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)











# ஜீப் தடம்புரண்டதில் மூவர் படுகாயம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரப்பாலம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஜீப் வாகனமொன்று வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டியிலிருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த குடும்பமொன்றே இந்த விபத்தில் சிக்கியுள்ளது.

ஜீப்பில் பயணித்த மூவர் படுகாயமுற்ற நிலையில் மகாஓயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# லொறியுடன் மோதி பெண் யானை பலி!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, தபலகமுவ பிரதேசத்தில் வைத்து கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற லொறியுடன் பெண் யானையொன்று மோதுண்டதில் பெண் யானை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது.

இந்தச் சப்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று வனஜீவராசிகள் அலுவலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

கந்தளாய் – லஹபத்த காட்டுப் பகுதியில் வசித்து வந்த பெண் யானை வீதியைக் கடக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று வனஜீவராசிகள் காரியாலய பாதுகாப்பு அதிகாரி எஸ்.ஏ.பீ.கே.நந்தசேன தெரிவித்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய லொறியைக் கண்டுபிடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக வனவிலங்கு திணைக்களம் மற்றும் அக்போபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதை ரத்துச் செய்தது நீதிமன்றம்


முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன தலைமையில் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதை இரத்து செய்து உயர் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க, சந்தியா எக்னலிகொட, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர உள்ளிட்ட 9 தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதியரசர்கள் குழாம் அனைத்து மனுதாரர்களுக்கும் வழக்கு கட்டணமாக தலா 150,000 ரூபாவை அரசாங்கம் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

# ‘திரைக்கு வராத சங்கதி’ நூல் ரவிவர்மாவின் ஆக்கம் வெளியீடு




எழுத்தாளரும், ஊடகவியலாளருமான சூரன்.ஏ.ரவிவர்மாவின் ‘திரைக்கு வராத சங்கதி’ எனும் நூல் வெளியீட்டுவிழா நாளை 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3.30 மணிக்கு கரவெட்டி வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.பாரதியின் தலைமையில் நடைபெறும்.

திருமதி ரவிச்சந்திரன் ரவிசக்தி (இதழ் வுவேசு சர்வதேச ஊடகம் பிரான்ஸ், ஆசிரியை, மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை) வரவேற்புரை நிகழ்த்துவார். ‘ஒருவன்’ செய்தித் தள முகாமையாளர் அ.நிக்ஸன் அறிமுகவுரையையும், ஜீவநதி,கடல் ஆகிய சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை தலைவர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் கருத்துரையையும் வழங்குவார்கள்.

# ஜனாதிபதித் தேர்தலில் இறங்கும் முதல் மலையகத் தமிழர் திலகர்!



சுதந்திர இலங்கையில் குடியுரிமை பறிக்கப்பட்டதால் மூன்று தசாப்தகாலமாக பல அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகமாக வாழும், மலையகத் தமிழினத்தினை இலங்கையின் அர்த்தமுள்ள குடிகளாக ஆக்குவதற்கு அவசியமான தேசிய கொள்கைத் தீர்மானங்களை கொள்கை வகுப்பாளர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் வலியுறுத்தும் விதமாக 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் களத்தைப் பயன்படுத்தத் தீர்மானம் எடுத்துள்ளதாக மலையக அரசியல் அரங்கம் அறிவித்துள்ளது.

அரங்கத்தின் அந்த உயர்மட்ட தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா சுயாதீன வேட்பாளராக பங்கு பெறுவதற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

'ஜனாதிபதி பதவியை வெல்வதற்காக அல்ல, மலையகத் தமிழ் மக்களுக்காக வெல்ல வேண்டிய பல உரிமைகளை தேசிய தளத்தில் சொல்வதற்காக' எனும் எண்ணக்கருவை முன்வைத்து ஜனாதிபதி தேர்தல் களத்தில் பங்குகொள்ளும் மயில்வாகனம் திலகராஜா மலையக அரசியல் வரலாற்றிலும் இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதித் தேர்தலிலும் வேட்பாளராக களம் இறங்கும் முதலாவது மலையகத் தமிழர் எனும் அடையாளத்தையும் பெறுகிறார்.

2000ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த காலம் முதல் தன்னை முழுமையான இலக்கிய, சமூக, அரசியல் செயற்பாட்டாளராக ஈடுபடுத்திக் கொண்ட திலகர் 2015 - 2020 காலப்பகுதியில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டார்.

தனது நான்கரையாண்டு நாடாளுமன்ற உறுப்பினர் காலத்தில் நுவரெலியா மாவட்டத்தில் சிறப்பாக செயற்பட்ட உறுப்பினர் என அங்கீகரிக்கப்பட்டமையுடன் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் முதல் தடவையிலேயே 29 ஆவது இடத்திற்கும் முன்னேறி இருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது ஏற்பட்ட உட்கட்சி முரண்பாடுகள் காரணமாக பொதுத் தேர்தலில் போட்டியிடாதமையுடன் கட்சி, கூட்டணியின் சகல பொறுப்புகளில் இருந்தும் விலகினார்.

கடந்த மூன்றாண்டு காலமாக 'மலையக அரசியல் அரங்கம்' எனும் சமூக-அரசியல் தளத்தை நிறுவி அடுத்தத் தலைமுறையினருக்கான அரசியல் செல்நெறியை வழிநடாத்தும் தலைமை ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு வருகிறார்.

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் காட்டப்பட்ட அநீதிக்கு எதிராக தனது முதலாவது ஆண்டில் நாடு தழுவிய அகிம்சா வழி போராட்டத்தை முன்னெடுத்த மலையக அரசியல் அரங்கம் அதில் வெற்றியையும் கண்டது.

தனது இரண்டாவது ஆண்டில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அக்கரப்பத்தன, கொட்டகல, நோர்வூட், மஸ்கெலியா ஆகிய நான்கு பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களையும் முன்னிறுத்தியது. தனது நாடாளுமன்ற பதவிக் காலத்தில் தான் முன்னின்று திருத்தம் செய்த பிரதேசச் சபை சட்டத்தை புதிதாக உருவாக்கப்பட்ட பிரதேச சபைகளில் நடைமுறைப்படுத்தும் எண்ணத்துடன் தேர்தல் களத்தில் இறங்கிய போதும் அந்த தேர்தல் நடாத்தப்படாமலே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

"மலையகத் தொழிலாளர்களையும் சிறு தோட்ட உடமையாளராக்கு" எனும் தொடர் பிரச்சார இயக்கத்தை தனது மூன்றாவது ஆண்டிலே முன்னெடுத்துவரும் மலையக அரசியல் அரங்கம் அறிவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலிலும் களம் இறங்கி மலையகத் தமிழ் மக்களின் வென்றெடுக்கப்பட வேண்டிய பல அரசியல் உரிமைகள் குறித்த தேசிய கொள்கை வகுப்பாளர்களினதும் ஆட்சியாளர்களினதும் கவனத்தைப் பெறுவதை இலக்காகக் கொண்டு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

# அரச சொத்துக்களை சட்டவிரோதமாக பயன்படுத்துவதை நிறுத்த அறிவுறுத்து

அரசு சொத்துக்கள் சட்டவிரோதமாக பயன்படுத்தப்படுமானால் அவற்றை மீள ஒப்படைக்குமாறு லஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அரச பதவிகளை வகித்து வந்த சிலர் அப்போதைய காலக் கட்டத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அவர்கள் பதவிகளை விட்டு விலகிய போதிலும் முறைகேடாக பயன்படுத்துகின்றனர் என முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அவ்வாறு சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப் படுமாயின் அவற்றை உடனடியாக மீளப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என லஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த சட்ட சபைகளின் தலைவர்களுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவு 41 மற்றும் 111ஆவது சரத்துக்களின் பிரகாரம் எவரேனும் ஒருவர் சட்டத்திற்கு அமைவாக அரச சொத்துக்களை ஒப்படைக்காமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோர் எண்ணிக்கை இப்போது 27 ஆக உயர்வு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று வரையில் 27 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் 13 பேர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாவர்.

ஏனையவர்களில் ஒருவர் அரசியல் கட்சி சார்பாகவும், ஏனைய 13 பேர் சுயேச்சை வேட்பாளர்களாகவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.





# தலதா மாளிகை பெரஹெரவை முன்னிட்டு கண்டிக்கு விசேட போக்குவரத்துச் சேவை

கண்டி தலதா மாளிகை பெரஹெரவை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதியிலிருந்து 19 ஆம் திகதி வரை விசேட பஸ் சேவைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி, கண்டி மாவட்டத்தை உள்ளடக்கிய வகையில் இந்த பஸ் சேவைகள் இரவு மற்றும் பகல் வேளைகளில் முன்னெடுக்கப்படவுள்ளன. கண்டி மாவட்டம் முழுவதும் மேலதிகமாக 438 பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

அத்துடன், கொழும்பு, கேகாலை, நாவலப்பிட்டி, கம்பளை, கம்பஹா, அநுராதபுரம், பொலனறுவை மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளிலிருந்தும் மேலதிக 100 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

# மன்னார் இளந்தாய் சிந்துஜாவின் உயிரிழப்பு; நீதியான விசாரணை இல்லை எனச் சந்தேகம்

## மன்னார் மாவட்டம் பொது அமைப்புக்களின் ஒன்றியம் விசனம்

மன்னார் இளந்தாய் சிந்துஜாவின் உயிரிழப்புத் தொடர்பில் நீதியான விசாரணை இல்லை எனச் சந்தேகத்துடன் விசனம் தெரிவித்துள்ள மன்னார் மாவட்டம் பொது அமைப்புக்களின் ஒன்றியம், இந்த விசாரணை யாவும் நீதியான முறையில் நடக்கின்றவையாகத் தெரியவில்லை, குற்றம் செய்தவர்களைக் காப்பாற்றுவதையே விசாரணைக் குழுக்கள் மேற்கொள்கின்றன என நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் மன்னார் மாவட்டம் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மத்திய அரசின் சுகாதார அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்தார்.

'திருமதி மரியராஜ் சிந்துஜாவின் உயிரிழப்பு விசாரணை தொடர்பாக' என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

கடந்த மாதம் 28 ஆம் திகதி மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் இடம்பெற்ற மரணம் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் பல கட்டமாக நடைபெற்று முடிந்துள்ளன. அதில் சிலர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக அறிகிறோம். அதில் இரண்டு தாதிய உத்தியோகத்தர்களும், இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்களும், ஒரு மருத்துவரும் இன்றைய தினம் (நேற்று) மன்னார் மாவட்டத்திற்குள் உள்ளக இடமாற்றம் செய்யப்பட உள்ளனர் என அறிகிறோம். இது முற்றிலும் தவறானது. இந்த விசாரணை யாவும் நீதியான முறையில் நடக்கின்றவையாகத் தெரியவில்லை. குற்றம் செய்தவர்களைக் காப்பாற்றுவதையே விசாரணைக் குழுக்கள் மேற்கொள்கின்றன என நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவ தினத்தன்று சம்பந்தப்பட்ட யாவருக்கும் எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அது ஒரு இடமாற்றமாக இருக்கக் கூடாது. அதிலும் குறிப்பாக வைத்திய அதிகாரிகளைக் காப்பாற்றுவதாகவே இந்நடவடிக்கை என அறிகிறோம். சட்ட வைத்திய அதிகாரி உள்ளதை உள்ளபடி அறிக்கை இடுவதற்கும் நெருக்கடி ஏற்படுவதாகவும் அறிகிறோம். எனவே பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதி கிடைக்கும் எனும் நம்பிக்கை இழந்து போகிறது. வழமையான மருத்துவ தவறுகள் போல் இதனையும் மாற்றிவிட முனைகின்றனர் என்றே நாம் எண்ணுகிறோம். தவறிழைத்தவர்கள் மீது காலதாமதம் இன்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் கடந்த காலத்தில் நடந்த எந்த ஒரு விசாரணையாவது உண்மையான குற்றவாளியை கண்டுபிடித்தது இல்லை. அவ்வாறு அரைகுறையாக கண்டுபிடித்தவர்களுக்கு கூட நடவடிக்கை எடுத்தது இல்லை. அரசியல் ரீதியிலும் சரி நிர்வாக ரீதியிலும் சரி இந்த நாட்டின் சாபக்கேடு நீதியை நிலை நாட்டுவதில் எப்பொழுதும் தோற்றே போகிறது இலங்கையின் ஜனநாயகம். இவ்வாறு தொடர்ந்து உண்மைகளை மூடி மறைத்தால் அரச வைத்தியசாலை மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும். இதனால் பாதிக்கப்பட போவது சாமானிய பொதுமக்களே. எனவே இதன் மூலம் தனியார் வைத்தியசாலைகளை நாடும் நிலையை ஏற்படுத்த போகிறீர்களா? ஆகவே நீதி நிழலாடும் பட்சத்தில் வைத்தியசாலைக்கு எதிராக தொடர் போராட்டத்தை மேற்கொள்வோம் என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத் தருகின்றோம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இக்கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாணம், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மன்னார் மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.




# மதுச் சாலைகள், இறைச்சிக் கடைகளுக்கு கண்டியில் பதினொரு நாள்களுக்குப் பூட்டு

கண்டி – எசல பெரஹரவை முன்னிட்டு 11 நாள்களுக்கு மதுபானசாலைகளை மூடுமாறு கலால் வரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, கண்டி நகர எல்லை மற்றும் அதனை அணமித்துள்ள மதுபானசாலைகள் இன்று முதல் எதிர்வரும் 11 நாள்கள் மூடப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி எசல பெரஹர இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த காலப் பகுதியில் மதுபானசாலைகளை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கண்டி நகர எல்லைக்குள் இறைச்சி மற்றும் மீன் விற்பனை நிலையங்களை மூடுமாறும் அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# அத்தியாவசிய உணவுப்பொருள்கள் சிலவற்றின் விலை திடீர் குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சிலவற்றின் விலைகளை நேற்று முதல் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 9 ரூபாவினால் குறைக்கப்பட்டு 249 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

கீரி சம்பா ஒரு கிலோகிராம் 12 ரூபாவினால் குறைக்கப்பட்டு 248 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கு 230 ரூபாவுக்கும், வெள்ளை கௌப்பி ஒரு கிலோ கிராம் 978 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராம் 255 ரூபாவுக்கும், பருப்பு ஒரு கிலோ கிராம் 280 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.



# கெஹலியவின் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசியை இறக்குமதி செய்த குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு நிறைவடையும் வரை தம்மை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்படி, இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தம்மைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பிலும் அன்றைய தினம் தீர்மானிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# கடுமையான தீர்மானங்கள் கட்டம் கட்டமாக சீரமைக்கப்படும் என்கிறார் சுசில் பிரேமஜயந்த

"பங்களாதேஷ் நாட்டின் தற்போதைய நிலைமை இலங்கையில் தோற்றம் பெறும் சூழல் காணப்பட்ட போது தனி நபராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால்களை பொறுப்பேற்றார். நாடாளுமன்றம் முற்றுகையிடப்பட்டிருந்தால் இன்று எவரும் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருக்க முடியாது. பொருளாதார மறுசீரமைப்புக்காக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கட்டம் கட்டமாக மறுசீரமைக்கப்படும்."

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பங்களாதேஷ் நாட்டின் நிலைமை கவலைக்குரியது.2022 ஆம் ஆண்டு இலங்கையில் போராட்டம் தீவிரமடைந்தது.

எரிபொருள்,எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கான வரிசை தீவிரமடைந்தது. அனைத்து பகுதிகளிலும் போராட்டம். இவ்வாறான கடுமையான சூழ்நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரமராகப் பதவியேற்றார்.

போராட்டம் தீவிரமடைந்து ஆட்சிமாற்றம் ஏற்பட்டதன் பின்னர் இடைக்கால ஜனாதிபதியாக பதவியேற்றார். பங்களாதேஷ் நாட்டின் நாடாளுமன்றத்தை போராட்டகாரர்கள் முற்றுகையிட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டு எமது நாடாளுமன்றத்தை முற்றுகையிடுவதற்கும், சபாநாயகரின் இல்லத்தை இடித்தழிப்பதற்கும் ஒருதரப்பினர் வருகை தந்தார்கள்.

நாடாளுமன்றம் முற்றுகையிடப்பட்டிருந்தால் இன்று எவரும் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருக்க முடியாது. உரையாற்றவும் முடியாது. ஆகவே யதார்த்தத்தை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயகத்துக்கு எதிரான போராட்டங்கள் ஒருபோதும் வெற்றிப் பெறாது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 53 பில்லியன் டொலர் சர்வதேச கடன்களையும், 43 பில்லியன் ரூபா தேசிய கடன்களையும் மறுசீரமைக்கும் தேவை காணப்பட்டது.



நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் பொருளாதார திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.பணவீக்கம் குறைவடைந்துள்ளது. அத்துடன் வெளிநாட்டு கையிருப்பு நிலைபேறான தன்மையில் காணப்படுகிறது. வெளிநாட்டு கடன்கள் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும்.

பொருளாதார கொள்கையை ஸ்திரமாக முன்னெடுத்துச் செல்வதற்காகவே பொருளாதார நிலைமாற்றம் மற்றும் அரச முகாமைத்துவ சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. பொருளாதார மீட்சிக்காக எடுத்த கடுமையான தீர்மானங்கள் கட்டம் கட்டமாக மறுசீரமைக்கப்படும்.

பெருந்தோட்ட மக்களுக்கு 1,700 ரூபா நாளாந்த கொடுப்பனவை வழங்க அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்தது. இந்த தீர்மானத்தை தோட்டக் கம்பனிகள் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தின. சம்பள விவகாரம் குறித்து எதிர்வரும் 12 ஆம் திகதி சம்பள நிர்ணய சபை பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளது.

நிர்ணய சபையின் தீர்மானம் ஏதுவாக இருந்தாலும் தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தில் தொழில் அமைச்சு உறுதியாக உள்ளது."– என்றார்.







# திரியாய்ப் படுகொலைகளின் 39 ஆவது ஆண்டு நினைவு!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை – திரியாய்ப் பகுதியில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டு 39ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு நேற்று திரியாய் ஆலயத்தில் விசேட பூசை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அத்துடன் படுகொலை செய்யப்பட்ட மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

1985ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் திகதி திரியாய் அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த அப்பாவி பொதுமக்கள் 12 பேரை மக்களின் போக்குவரத்திற்காக ஈடுபட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் ஏற்றிச் சென்று கஜ/வத்த என்னும் இடத்தில் வைத்து அவர்கள் அணிந்திருந்த மேற்சட்டையை கழட்டி அவர்களது கைகளை கட்டி ஓடவிட்டு சுட்டு படுகொலை செய்திருந்தார்கள் எனக் கூறப்படுகின்றது.

1985 ஆம் ஆண்டு இன அழிப்பு வன்முறை உச்ச கட்டம் அடைந்திருந்த நிலையில் ஆடி மாதம் 5ஆம் திகதி திரியாய் கிராமத்திற்குள் புகுந்த ஆயுததாரிகளும், சிவில் உடை தரித்த காடையர்களும் திரியாய் கிராமத்தில் உள்ள வீடுகள் அனைத்தையும் தீக்கிரையாக்கியமையுடன் சொத்துக்களையும் தீக்கிரையாக்கி அழித்தார்கள். இந்நிலையில் திரியாய் கிராம மக்கள் பலர் கிராமத்தை விட்டு வெளியேறினர். ஏனையோர் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருந்தார்கள். இவர்கள் மீதே இவ் வன்முறை சம்பவம் இடம்பெற்றிருந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

# நாட்டில் அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

கடந்த ஒன்பது நாள்களில் மாத்திரம் 1,050 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த 24 மணித்தியாலங்களில் 148 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் இலங்கையில் மொத்தமாக 33 ஆயிரத்து 795 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதிக டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளமையுடன், இதுவரையில் 13 ஆயிரத்து 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் ந்த் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த வருடத்தில் மாத்திரம் டெங்கு நோயினால் 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.






SRI LANKA CANADA BUSINESS COUNCIL
OF CEYLON CHAMBER OF COMMERCE

Sri Lanka – Canada Business Council
of the
Ceylon Chamber of Commerce

AGENDA

Friday, 9th August 2024

1.00p.m to 1.30p.m - Jaffna Hospital Event

2.00p.m to 3.00p.m - Business Forum & Net Working Session
➢ Venue: Jaffna Chamber of Commerce Auditorium

3.00p.m to 3.30p.m - Signing of 4 MOUs
• Jaffna District Chamber of Commerce (JDCC)
• Jaffna Manager's Forum (JMF)
• The Management Club – Jaffna
• Trincomalee District Business Council (TDBC)
➢ Venue: Jaffna Chamber of Commerce Auditorium

4.00p.m to 5.00p.m - Joint Press Briefing
SLCBC / CSLBC / JDCC / JMF / TMC-J / TDBC
➢ Jaffna Chamber of Commerce Auditorium

7.00p.m to 9.00p.m - Networking Dinner
➢ Venue: J Hotel

# இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்துடன் யாழ். வணிகர் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனமும் (The Srilanka - Canada Business Council) யாழ்ப்பாண வணிகர் கழகமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளனர்.

பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் குறித்த ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டுள்ளது.

இதன்போது யாழ்ப்பாண வணிகர் கழகம், யாழ்ப்பாண முகாமையாளர் நிறுவணம், யாழ்ப்பாண முகாமைத்துவ கழகம் மற்றும் திருகோணமலை வர்த்தக அமையம் ஆகிய நிறுவனங்கள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம், The Srilanka - Canada Business Council தலைவர் பிரியந்த சந்திரசேக உள்ளிட்ட உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




























# யாழ்ப்பாணம் சர்வதேசப் புத்தகத் திருவிழா நேற்று ஆரம்பம் நாளை வரைத் தொடரும்

'யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா – 2024' நேற்றுக் காலை யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையத்தில் ஆரம்பமாகியுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் புத்தகத் திருவிழாவை ஆரம்பித்து வைத்தார். நேற்று முதல் நாளை 11ஆம் திகதி வரை தினமும் காலை 10.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரை இந்த புத்தகக்கண்காட்சியும் விற்பனையும் நடைபெற உள்ளன.

யாழ்ப்பாண தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் புத்தகத் திருவிழாவில் இருபதுக்கும் மேற்பட்ட புத்தக விற்பனை நிலையங்கள், வெளியீட்டகங்கள், புத்தகங்கள் சார் அமைப்புக்கள் பங்குபற்றுகின்றன. இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பலவேறு நாடுகளில் இருந்தும் வெளிவரும் புத்தகங்கள் இந்தக் கண்காட்சியில் விற்பனை செய்யப்படுகின்றன.



சமூகத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் வகையிலும், எழுத்தாளர்களை வெளிக்கொண்டுவரும் வகையிலும், எழுத்தாளர்கள் வாசகர்கள் சந்திப்புக்கான களமொன்றை உருவாக்கும் வகையிலும் யாழ்ப்பாண புத்தகத் திருவிழா 2024 இனை யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றம் ஒழுங்குசெய்துள்ளது.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா இனி ஒவ்வொருவருடமும் இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் முதியோர் என அனைத்து தரப்பினருக்குமான புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.
















# புத்தளத்தில் கைதான இந்திய மீனவர்கள் 35 பேருக்கும் 21 வரை விளக்கமறியல்!

## இவ்வருடத்தில் இதுவரை 322 இந்திய மீனவர்கள் கைது

(ரஸீன் ரஸ்மின்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் குதிரமலை பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த நிலையில் கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட 35 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் டி.எல்.ஏ.என். விமலரத்ன நேற்று மாலை உத்தரவிட்டார்.

நான்கு படகுகளில் இந்தியா தமிழகம் பகுதியில் இருந்து மீன்பிடித் தொழிலுக்காக வருகை தந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இந்திய மீனவர்கள் பயணித்த நான்கு விசைப் படகுகளும், மீன்பிடிப்பதற்குப் பயண்படுத்தப்பட்ட உபகரணங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 35 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பிரதேச கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவர்கள் நேற்று மாலை புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் சார்பில் இந்திய உயர் ஸ்தானிகரின் வேண்டுகோளின் பேரில் சட்டத்தரணி அபுஹர் மொஹமட் அஸ்பர் மன்றில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது சந்தேக நபர்களான இந்திய மீனவர்கள் 35 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை கற்பிட்டியின் வடக்கே குதிரமலைப் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டமையுடன், அவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு இம்மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

மேலும் இந்த வருடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இலங்கையில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 44 இந்திய மீன்பிடி படகுகளை கைப்பற்றியுள்ளமையுடன், 322 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.





# எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான நட்டஈட்டை பெற்றுக்கொடுக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் கோரிக்கை

“எக்ஸ்பிரஸ் பேர்ள் தீப்பற்றியதால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு அரசாங்கத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் நட்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக விபத்தை ஏற்படுத்திய கப்பல் நிறுவனம் நினைத்த தொகையை நட்டஈடாக வழங்குவதற்கு அரசாங்கம் இடமளிக்கக்கூடாது.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27இன் 2 கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது கடல் எல்லைக்குள் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் சமுத்திரத்துக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டதுடன் கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் நட்டஈடு பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மந்தகதியிலேயே மேற்கொண்டு வருவதாகவே தெரியவருகிறது.

இதுவரை நட்ட ஈடாக பி.என்.ஐ. கழகத்தினால் 10,2 மில்லியன் டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாக முன்னாள் நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் இந்த நட்டஈட்டு தொகை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு விநியோகிக்கப் பின்பற்றிய பொறிமுறை என்ன என கேட்கிறோம்.


எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் நாடாளுமன்ற குழு அமைத்து விசாரணை மேற்கொண்டு, அந்த அறிக்கை பூரணப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அறிக்கை இதுவரை வெளியிடப்படாமல் இருக்கிறது. அதனை வெளியிடாமல் இருப்பதற்கான காரணம் என்ன? இவ்வாறு வெளியிடாமல் இருப்பது பாரிய பிரச்சினை. அறிக்கையை பார்ப்பதற்கு நாட்டு மக்களுக்கு இடமளிக்க வேண்டும். முடியுமானால் இன்றே அதனை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் வழங்குவதற்காக பி.என்.ஐ. கழகத்துக்கு தேவையான தொகை ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. இது முறையல்ல. விபத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பே அது தொடர்பில் மதிப்பீடு செய்து, விபத்தை ஏற்படுத்திய தரப்பிடமிருந்து அதற்கான நட்டஈட்டை கோர வேண்டும்.

எமது நாடு சுயாதீன நாடு. இறையாண்மையுள்ள நாடு. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்டிருப்பது எமது கடல் சூழலும் எமது நாட்டு மக்களுமாகும். அதனால் அதுதொடர்பில் மதிப்பீடு செய்து நட்டஈடு கோறுவதற்கு பூரண அதிகாரம் எமது நாட்டுக்கு இருக்கிறது.

அவ்வாறு இல்லாமல் விபத்தை ஏற்படுத்திய கப்பல் நிறுவனம் ஒரு தொகை பணத்தை வழங்கி, அதனை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு பகிர்ந்தளிக்குமாறு தெரிவிப்பது போன்றதொரு நிகழ்வே தற்போது இடம்பெற்றிருக்கிறது. இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

அதனால், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் முறையான மதிப்பீட்டின் அடிப்படையில், நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதனை அரசாங்கம் விரைவாக மேற்கொள்ள வேண்டும்.”– என்றார்.











# வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் அலுவலகத்தால் பதிவுகள் முன்னெடுப்பு

(கே.வசந்தன்)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தினால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான இறுதி கட்டப் பதிவுகள் நேற்று வவுனியா பிரதேச செயலகத்தில் இடம் பெற்றன.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் பிரதானிகள் கலந்து கொண்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் இறுதிக் கட்டப் பதிவுகளை மேற்கொண்டமையோடு விடயங்களையும் கேட்டறிந்திருந்தனர்.

இதன்போது 62 பேருக்கு கடிதங்கள் தபால் மூலமாகவும் கிராம சேவையாளர் ஊடாகவும் அனுப்பப்பட்டு இந்த பதிவு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுமாறு காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் ஒருவர், எதிர்வரும் மாதம் அளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களுக்காக நஷ்டஈடும், சான்றிதழும் வழங்குவதற்கு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தங்களிடம் அவர்கள் தெரிவித்தனர் எனக் கூறியிருந்தார்



# இன்றைய ராசி பலன்கள் -10.08.2024




இன்று உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் பனியின் செயல் திறனில் உங்கள் திறமையை நிரூபிக்க சாதகமாக இருக்கும்.உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி பொங்கும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கு சாதகமான நாள். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று சில மாற்றங்கள் காணப்படும். அதற்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பேசும்போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் அனைத்து விதத்திலும் உங்களுக்கு நற்பயன் அளிக்கும்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். என்றாலும் நற்பயன் கிடைக்க நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். உங்களின் புதுமையான கருத்துக்கள் மூலம் உங்கள் படைப்புத்திறன் பிரகாசிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் சமநிலையோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதால் தகுந்த மருத்துவ சிகிச்சை மூலம் குணப்படுத்திக் கொள்ள வேண்டும்.




நீங்கள் இன்று எதிர்படும் சவால்களை விவேகத்துடனும் உறுதியுடனும் கையாள வேண்டும்.உற்சாகமான நேர்மறையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. பனிச் சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியில் சிறந்த பலனைக் காண உங்கள் பணிகளை ஒழுங்காக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் லேசான விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நகைச்சுவையான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணப்பற்றாக்குறை காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் தேவைகளை சந்திக்க போதிய பணம் கையில் இருக்காது.

ஒவ்வாமை காரணமாக சளி ஃ இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது.




இன்று மிகவும் பரபரப்பாக காணப்படுவீர்கள். இன்று உங்களின் எளிமையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். உறுதி மற்றும் தைரியம் மூலம் உயர்வான வெற்றியை அடைவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு நன்மை பெற்றுத் தரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு கணிசமாக அதிகரிக்கும். இன்று அதிக பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் நேர்மறையான ஆற்றல் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்கள் எதிர்காலம் பற்றிய அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி எடுப்பீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். அது உங்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தித் தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடனான உறவை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகு முறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

இன்று போதிய அளவு பண வரவு இருக்காது. ஏற்றத்தாழ்வு காரணமாக நிதியில் ஸ்திரத்தன்மை சாத்தியம் இல்லை.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று சில பதட்டமான சூழ்நிலை காணப்படும். அதிலேயே அதிக நேரம் கழியும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

பணிகளின் இயல்பு கடினமாக இருப்பதன் காரனமாய் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் பராமரிப்பிற்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவையற்ற வகையில் பணம் இழக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். சிகிச்சைக்காக ஏற்படும் அதிக செலவுகள் உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று அவநம்பிக்கையும் பதட்டமும் காணப்படும். இசை கேட்பது அல்லது புத்தகம் படிப்பது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிச்சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். உங்கள் பணிகளை இன்று எளிதாக முடிக்கும் நிலை காணப்படாது.

உங்கள் மனதில் ஏற்படும் குழப்பமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். அதனை சமாளிப்பது இயலாத நிலையாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தலை வலி வர அதிக வாய்ப்பு உள்ளது. தியானம் அல்லது பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று மிகவும் வெற்றிகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல்களை எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் மேற்கொள்வீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். அனைத்து விதத்திலும் வளர்ச்சி காணப்படும்.

பணியிடத்தில் நீங்கள் சிறப்பாகவும் தன்னிச்சையாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்வுகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். வங்கியில் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களின் மன உறுதி உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -10.08.2024




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது அல்லது திரைப்படம் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதை திசை திருப்பி ஆறுதல் பெறலாம்.

நீங்கள் பொறுமையின்றி செயல்படுவதை விட புத்திசாலித்தனத்தை பயன் படுத்த வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக மேற் கொள்ள இது அவசியம்.

உங்கள் துணையிடம்உணர்ச்சி வசப்பட்ட மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படும். கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

முதுகில் விறைப்புத் தன்மை மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் பெரிய ஆரோக்கியப் பிரச்சினைகளையும் சமாளிக்காலாம்.




இன்று விருப்பமான பலன் காண சாதகமான நாள் அல்ல. நீங்கள் உங்கள் முன்னேற்றம் குறித்து கவலைப் படுவீர்கள். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பாதையில்வரும் தடைகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். பணிகளை நம்பிக்கையுடன் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. உங்கள் நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நீங்கள் தவறான முறையில் நடந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை ஸ்திரத்தன்மை யின்றி காணப்படும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே காணப்படும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்த கவலை காணப்படும். அவர்களின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று அனைத்து செயல்களிலும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைப்பது கடினமாக உணர்வீர்கள். நீங்கள் பதற்றத்துக்கு ஆளாவீர்கள்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

சில தவறான புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்படும்.

இன்று குடும்பத்தின் நலனுக்காக தேவையற்ற செலவுகள் காணப்படும். அதிக செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மகரம் ஆரோக்கியம்:

1 2 3 4 5ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. கால் வலியால் பாதிக்கப்படலாம். இது உங்களுக்குச் சற்றுக் கவலையை அளிக்கும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். ஆன்மீக ஈடுபாடு சிறந்த ஆறுதல் தரும். நீங்கள் விரைவில் புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

பணியைப் பொறுத்தவரை நல்ல பலனடைவீர்கள். உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனனைந்து வீட்டில் நடைபெறவிருக்கும் சுப நிகழ்ச்சி குறித்த திட்டங்களை திட்டுவீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி கிட்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறிது பணம் இழக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் திடமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.






# இந்திய மீனவர்களின் கைதுக்கு தமிழகத் தலைவர்கள் எதிர்ப்பு



இலங்கை கடற்பரப்பில் இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படுகின்றமைக்கு தமிழகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 35 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் பயணித்த 4 படகுகளும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவை அண்மித்த தென் கடல் பகுதியில் வைத்துக் குறித்த இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசு நிரந்தர தீர்வை எட்ட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், கச்சத்தீவு விவகாரத்தைத் தேர்தல் நேரத்தில் மாத்திரம் இந்திய மத்திய அரசாங்கம் கவனத்தில் கொள்வதாகவும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், இலங்கை அரசின் இந்த நடவடிக்கை சர்வதேச விதிகளுக்கு முரணானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# ராகுல் காந்தியை சந்தித்தனர் தமிழக மீனவப் பிரதிநிதிகள்



தமிழக மீனவர் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பக் கோரி டில்லியில் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தியை நேரில் சந்தித்து மீனவ பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

அகில இந்திய மீனவர் காங்கிரஸின் தேசிய தலைவர் ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ தலைமையில், தமிழக மீனவப் பிரதிநிதிகள் ஜேசுராஜா, சகாயம், எம்ரிட், ராயப்பன், பேட்ரிக் உள்ளிட்டோர் டில்லி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை சந்தித்து, தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பான கோரிக்கை மனுவை வழங்கினர்.

அந்த மனுவில் குறிப்பிடுகையில், “ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி காலத்தில் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மீனவர்களின் படகுகளும், சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களும் மிக எளிதாக விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் பாஜக ஆட்சி காலத்தில் கடந்த 2018 முதல் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு படகு கூட விடுவிக்கப்படவில்லை. படகுகள் இலங்கை நாட்டுடமையாக்கப்படுகின்றன. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 125 மீனவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடனே மீட்கப்பட வேண்டும் அல்லது படகு ஒவ்வொன்றுக்கும் தலா 50 லட்சம் ரூபாஅரசு இழப்பீடு வழங்க வேண்டும். அமெரிக்க அரசாங்கம் இந்திய இறால்களை தங்கள் சந்தையில் தடை செய்துள்ளது. இது இந்திய மீன்பிடி துறையை கடுமையாக பாதித்துள்ளது. மத்திய அரசு அமெரிக்க அரசுடன் ராஜதந்திர பேச்சுவார்த்தைகளுடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

தமிழக மீனவப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க ராகுல் காந்தி இந்தப் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டும்.” என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராமேசுவரம் மீனவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை ரத்து செய்து, இன்று முதல் மீன்பிடிக்கச் செல்ல இராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து நேற்று இராமேசுவரம் மீன்பிடி துறைமுகம் பகுதியில் ராஜீவ் காந்தி விசைப்படகு மீனவர் சங்க தலைவர் தட்சிணாமூர்த்தி தலைமையில் மீனவ பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, உயிரிழந்த மீனவரின் உடல் மற்றும் உயிர் பிழைத்த 2 மீனவர்களை இராமேசுவரத்திற்கு கொண்டு வந்ததற்கும், காணாமல் போன மீனவரை தொடர்ந்து தேடி வருவதற்கும், மத்திய மாநில அரசுகளுக்கு நன்றி.

உயிரிழந்த மற்றும் மாயமான மீனவர்களின் குடும்பத்திற்கு தலா 10 லட்சம் ரூபா நிவாரணம் வழங்கியதற்கும், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், படகுகளையும் மீட்கவும், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் விதமாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரை நேரில் மீனவ பிரதிநிதிகள் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுத்த தமிழக முதல்வருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அறிவித்திருந்த காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை ரத்து செய்து, ஒகஸ்ட் 10 முதல் அனைத்து விசைப்படகுகளும் எல்லை தாண்டாமல் பாதுகாப்பாக மீன்பிடிக்கச் செல்வது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# நாடு திரும்புகிறார் ஷேக் ஹசீனா; அவரது மகன் சஜீப் வசீத் தகவல்



பங்களாதேஷில் மீண்டும் ஜன நாயகம் நிலைநாட்டப்பட்டதும் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா நாடு திரும்புவார் என அவரின் மகன் சஜீப் வசீத் தெரிவித்துள்ளார்.

இதனை அவர் சமூக வலைதளங்களில் காணொளி ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளார்.

எனினும், அவர் தீவிர அரசியலில் ஈடுபடுவாரா இல்லையா என்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷில் நடக்கும் போராட்டத்தின் பின்னணியில் பாகிஸ்தானின் உளவு அமைப்புகள் இருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும், பாகிஸ்தானின் ஐ.எஸ். புலனாய்வுப் பிரிவு இதில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் தன்னிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் வன்முறை வெடித்து பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்த பதவி விலகிய பிரதமர் அந்நாட்டிலிருந்து வெளியேறினார்.

இதனை தொடர்ந்து பதவி விலகல் செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ள பங்களாதேஷ் பிரதமர் ஹேக் ஹசீனா மீண்டும் அரசியலில் ஈடுபடமாட்டார் என அவரது மகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ரஷ்ய போர்களம் செல்லும் உக்ரைனின் ரோபோ நாய்கள்

ரஷ்யாவுடன் போரில் ஈடுபட்டு வரும் உக்ரைன் தமது இராணுவ நடவடிக்கைகளுக்காக புதிதாக ரோபோ நாய் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரியவந்துள்ளது.

உக்ரைன் இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆளணி பற்றாக்குறையே குறித்த ரோபோ நாய் உருவாக்கப்பட்டமைக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

அந்தவகையில், "Bad One" என பெயரிடப்பட்டுள்ள மேற்படி ரோபோ நாயானது, இராணுவ நடவடிக்கைகளிலும், போர்களத்திலும் விரைவில் பயன்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக இவை கண்ணிவெடிகளை கண்டறிதல் போன்ற ஆபத்தான பணிகளை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பெயரிடப்படாத ஒரு பகுதியில் நடத்தப்பட்ட செயல்திறன் விளக்கத்தின் போது இந்த ரோபோ நாய் அதற்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளுக்கு ஏற்றவாரு செயல்பட்டன என அதனை உருவாக்கியவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இதன் மேம்படுத்தப்பட்ட மாதிரிகளான "Bad Two" என்ற மற்றுமொரு ரோபோ நாய்களை உருவாக்கியுள்ளதாகவும் ஒரு சில பாதுகாப்புக்காரணங்கள் காரணமாக அவை தொடர்பான தகவல்களை வெளியிட முடியாது என உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளமை குறிப்பிதத்தக்கது.





### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

# நேரடி விவாதத்துக்கு டொனால்ட் ட்ரம்ப் தயார்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய ஜனாதிபதி வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப் 3 விவாதங்களுக்கு தயாராக இருக்கின்றார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் முன்னணி ஒளிபரப்பு நிறுவனங்களில் 3 விவாத நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தயாராக இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதன்படி, செப்டம்பர் மாதம் 4ஆம் திகதி குழஒ நேறள இல் முதல் விவாதத்திற்கும், செப்டம்பர் 10ஆம் திகதி NBC யில் இரண்டாவது விவாதத்திற்கும், செப்டம்பர் 25ஆம் திகதி மூன்றாவது விவாதத்திற்கும் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கமலா ஹாரிஸின் பிரச்சார கூட்டமைப்பின் சம்மதம் மற்றும் தயார் நிலை குறித்து அறிய ட்ரம்ப் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று விவாதங்களும் எங்கு நடைபெறும், பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்பது குறித்து விவரங்களை ட்ரம்ப் வெளியிடவில்லை.